பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை 03.10.2023 கதிர் 325

## முல்லை நீதிபதியின் பதவி விலகல்; முறையான விசாரணை நடத்துங்கள்

### பிரதம நீதியரசரிடம் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

முல்லைத்தீவு நீதிவான் மற்றும் மாவட்ட நீதிபதியின் இராஜினாமா தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா செப்டெம்பர் 29 தனது பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில் நேற்றுக் காலையில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவை உயர் நீதிமன்ற வளாகத்தில் தனியாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினர் சந்தித்தனர்.

இச்சந்திப்பு தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண தெரிவித்ததாவது:

பிரதம நீதியரசரைச் சந்தித்த நாம், நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமாவுக்குக் காரணமாக இருந்த சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அழுத்தம் ☞2

## வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் முல்லைத்தீவில் போராட்டம்

### நீதிமன்றம் முன்பாக இன்று காலை

முல்லைத்தீவு நீதிபதி ரீ. சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடக்கு கிழக்கு மாகாண சட்டத்தரணிகள் இணைந்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் இணைந்து இந்தப் பெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி ரீ. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று தொடக்கம் காலவரையறையின்றி தொடர் நீதிமன்றப் புறக்கணிப்புகணிப்பை செய்வதாக முடிவெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தைச் சார்ந்த சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## இனி இது ரகசியம் அல்ல!

ஆட்சியாளர்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கடன் கொடுப்பனவு தாமதித்துள்ளது. அது எப்போது கிடைக்கும் என்பது குறித்த நிச்சயமான நிலை ஒன்று இல்லை. இதனால் ஆட்சியாளர்கள் கடும் நெருக்கடியை வரும் மாதங்களில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இந்த நிலைமைக்குக் காரணம் நாணய நிதியம் விதித்த நிபந்தனைகளில் முக்கியமானவற்றைச் செயற்படுத்தாமல் போனமைதான். குறிப்பாக அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இந்த ஆட்சியிடம் எந்தத் திட்டமும் இல்லை.

அடுத்துவரும் சில மாதங்களுக்கு அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உடனடிவழிகள் ஏதும் ஆட்சியாளர்களிடம் இல்லை. எனவே நாணய நிதியத்தின் இரண்டாடம் கட்டக் கடன் தொகையைப் பெறுவதற்கு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை ஆட்சியாளர்கள் நேர்த்தியாக முடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதுவும் இதுவரையில் சரியாக நடக்கவில்லை.

பாரிஸ் கிளப், இந்தியா, ஜப்பான் போன்றன தமது கடன்களை மறுசீரமைக்கத் தயாராக இருக்கின்றன. ஆனால், சீனாவும் தம்மோடு இணைந்து வரவேண்டும் என்று அவை எதிர்பார்க்கின்றன. சீனா அதற்கு ஒத்துழைப்பதாக இல்லை. அப்படியென்றால் சீனா தனது கடன்மறுசீரமைப்புத் திட்டத்தை ☞2

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிற்கு இது குறித்து கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, குறித்த சட்ட மூலம் தொடர்பில் தனது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது.

அதன்படி, இலங்கையர்களின் இணையவெளிபாதுகாப்பைஉறுதி செய்யவேண்டியதன்அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளமனிதஉரிமை ஆணைக்குழுஉத்தேசசட்டமூலம் குறித்து கேள்விஎழுப்பியுள்ளது.

நிகழ்நிலை செயற்பாடுகள் தொடர்பிலான புதிய குற்றங்களுடன் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் தற்போதுள்ள சட்டங்களை நல்லெண்ணத்துடன் விளக்கி செயற்படுத்துவதற்கான சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் திறனை அதிகரிக்க வேண்டும்.

மன உளைச்சலின் அளவு வேறுபடலாம் அல்லது மற்றும் மிகவும் அகநிலையாகவும் இருக்கலாம் என்பதால் நபர்களிற்குத் துன்பகரமானதாக ☞2

## பயங்கர, கொடூர சட்டங்கள் மீளப்பெறப்படவேண்டும்

### சட்டத்தரணிகளின் ஒருங்கிணைந்த கூட்டு வலியுறுத்து



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஆகியன மீளக் பெறப்படவேண்டுமென இலங்கை சட்டத்தரணிகளின் ஒன்றிணைந்த கூட்டு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகளின் ஒன்றிணைந்த கூட்டின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அங்கு, ஜனாதிபதி சட்டத்தரணிகள் கருத்து வெளியிடும்போது இதனை வலியுறுத்தினர். அவர்கள் தெரிவித்ததாவது: ☞2

## மின் கட்டணம் அதிகரித்தால் தொழிற்றுறை முற்றாக வீழும்

### சம்பிக்க ரணவக்க எதிர்வுகூறல்



மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டில் மிகுதியாகவுள்ள சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை உட்பட ஆடை உற்பத்தி தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடையும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை கோரிக்கை விடும் போது அதற்குச் ☞2

## பொலிஸாரை கடித்துவிட்டு தப்பியோடிய சந்தேகநபர்

(ந.லோகதயாளன்)

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸாரைக் கடித்துவிட்டுத் தப்பியோடிய சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் முருங்கன் வைத்தியசாலை நோயாளர் காவு வண்டிச் சாரதி என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் வங்காலையைச் சேர்ந்த சாரதி ஒருவரும் வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் ☞2



## எதிர்க் கட்சித் தலைவரை சந்தித்தார் அமெ. துதுவர்

அமெரிக்கா தூதுவர் ஜூலி ஜே.சங்கிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் ஐக்கிய அமெரிக்கா தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி மேத்யூ ஹின்சனும் கலந்து கொண்டார்.

தற்போதைய இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அவதனாம் செலுத்தி இரு தரப்பினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

தற்போதைய அரசாங்கத்தின் ☞2

## நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மறுசீரமைக்கப்படுவது கட்டாயம்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்களின் நலன்களைப் பேணுவதாக இந்த ஆட்சி குறிப்பிடுகிறது. ஆனால் நாட்டில் 52 சதவீதமான சிறுவர்கள் ஊட்டச்சத்துக் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மந்த போசனையால் சிறுவர்கள் பாதிக்கப்படும்போது எதிர்கால தலைமுறை நலிவுற்றதாகவே அமையும்.

பொருளாதார பாதிப்பால் நடுத்தர குடும்பங்களின் சுகாதார நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகர சபை முன்



னெடுத்த ஆய்வுக்கு அமைய மந்த ஊட்டச்சத்து குறைவாக உள்ள நகரங்களின் பட்டியலில் கொழும்பு நகரம் முன்னிலையில் உள்ளது. இது ஆரோக்கியமானதொரு தரப்படுத்தலல்ல.

பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியமே இறுதித் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ☞2

## 6 மில்லின் டொலர் சில நாள்களில் நட்டம்

சிறீய லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான 8 விமானங்களின் சேவைகள் கடந்த சில நாள்களாகத் தாமதமானதால் 6 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறீலங்கன்எயார்லைன்ஸ்விமானசேவையின் பல விமானங்கள் தாமதமாகப் புறப்படுவதால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள ☞2

## சமூக ஊடகங்கள் மீது கட்டுப்பாடு அவசியம்

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு

சமூகஊடகங்களைநசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் அவற்றைக் கட்டுப்படுத்த சில ஏற்பாடுகள் அவசியமாக உள்ளதால் அவற்றை சட்டமூலத்தில் உள்ளடக்கியுள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் நேற்றையதினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞2




## வாகன அனுமதிப் பத்திரத்துக்கான புதிய டிஜிட்டல் முறை இந்த மாதம்

### அறிமுகமாகின்றது என அறிவிப்பு

வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான புதிய கட்டமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வு, ஒப்டோபர் 7 முதல் தொடங்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

இந்நாட்டில் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தவும் முறைகேடுகளைகத்தடுக்கவும்அரச சேவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்படவேண்டும். எனவே, இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையின்போது அனைத்து அரச நிறுவனங்களும் டிஜிட்டல்மயமாக்கப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

பிரதேசசெயலகங்கள், பிரதேச சபைகள், மாநகரசபைகள், மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட ஒன்பது வகையான அரசநிறுவனங்களைத் தெரிவுசெய்து, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் ஒன்பது முன்னோடி வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ☞2

## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் கொடூர சட்டங்களை எதிர்த்து கோட்டையில் போராட்டம்

உத்தேசபயங்கரவாதஎதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் ஆகியவற்றுக்கு எதிராக கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் கண்டனப் போராட்டம் கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னதாக நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம், போராட்டக் கழக மத்திய நிலையம், இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இதில் பங்கேற்றிருந்தன.

இதன்போது, பெருமளவிலான, கலகமடக்கும் பொலிஸார், பொலிஸார், அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்ததோடு, நீர்த்தாரை வாகனங்களும், கண்ணீர்ப் புகைக்குண்டு பிரிவினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

முன்னதாக, துமிந்த நாகமுவ, ஜோசப் ஸ்டாலின், தம்மிக முனசிங்க ☞2

## நீதித்துறை மீதான அழுத்தம் எதிர்காலத்திற்கு நெருக்கடி

### கவலை தெரிவிக்கிறார் ரிஷாத் பதியுதீன்



நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால், சர்வதேச உதவிகளை நம்பியுள்ள நாட்டின் எதிர்காலத்துக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முதலில் அறிவிக்கட்டும் என்று கூறிவிட்டுஇந்தமூன்றுதரப்புகளும் காத்திருக்கின்றன.

முன்னதாக இந்த மாதத்தில் கடன் மறுசீரமைப்புப் பணிகளை முழுமைப்படுத்த முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இப்போது அது சாத்தியம்தானா என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது.

இந்தமாதநடுப்பகுதியில்ஜனாதிபதி ரணில் சீனாவிற்குப் பயணம் செய்ய இருக்கிறார். அப்போது அவர் சீனத் தலைவருடன் பேசி கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஓர் உடன்படிக்கைக்கு வரவில்லை என்றால் நிலமை மேலும் மோசமாகும்.

இதற்கிடையில்உலகவங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளும்கூட இலங்கைக்கு கடன் வழங்க முடியாத நிலைக்கு வந்துள்ளன. இந்த இரு நிறுவனங்களும் சிறிய அளவில் இலங்கைக்கு கடன் கொடுத்து வந்திருக்கின்றன. அடுத்துவரும்மாதங்களில்அதுவும் கிடைக்காது என்கிறபோது நிலமை இன்னும்மோசமடைவதற்கேவழி ஏற்படப்போகின்றது.

- இடிமின்னல் -

(idiminnal23gmail.com)

## முல்லை நீதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகள் வெளிப்படுத் தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

வெறுமனே ஒரு நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், அழுத்தம் என்பதற்கு அப்பால் இந்த நாட்டின்நீதித்துறையின்சுயாதீனம் கேள்விக்குள்ளாகியுளதை அவரிடத்தில் எடுத்துரைத்தோம்.

நாட்டில்சட்டத்தின்ஆட்சி, நீதித்துறையின்சுதந்திரம்ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டியது தற்போதைய நிலையில் அவசியமாகின்றது. ஆகவே நீதிபதியின் விடயத்தில் வெளிப்படையான செயற்பாடுகள் அவசியமாகின்றன.

மேலும், நீதிபதியின் விடயம் சம்பந்தமாக தொடர்புடைய நிறுவனங்களின் செயற்பாடுகளை நாம் தொடர்ந்தும் அவதானித்துக் கொண்டிருப்போம் - என்றார்.

## நிகழ்நிலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணப்படும் அறிக்கைகளை குற்றமாக்குவதை இந்த சட்டமூலம் தவிர்க்கவேண்டும்.

அத்தகைய காயத்திற்கான நடவடிக்கைகளை சிவில் சமூகத்திடம் விட்டுவிடுவதே சிறந்தது - பாதிக்கப்பட்ட பட்ட நபர் நீதியை கோரலாம் - என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தேசநிகழ்நிலைபாதுகாப்பு ஆணைக்குழுவை, அதன் அரசியல் சுதந்திரத்தை உறுதிசெய்யும் நியமித்தல் பொறிமுறை மூலம் ஏற்படுத்தவேண்டும் என்ற பரிந்துரையையும் மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

## பயங்கர, கொடூர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) "இந்த ஆட்சி, பொதுமக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதை அடக்கி ஒடுக்குவதற்காக தற்போதைய சட்டமூலங்களை கருவிகளாக கையிலெடுத்துள்ளது. இந்தச் சட்டங்கள் பயங்கரவாதத் தன்மைநிறைந்தவை. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் சிந்திப்பதை, கருத்து வெளியிடுவதைத் தடுக்கின்றது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பது அவசியமில்லை. அவசரமான நிலமைகள் ஏற்பட்டால் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஆகவே இவ்விரு சட்டமூலங்களும் அவசியமற்றவை. அவற்றை மீளப் பெறவேண்டும்" என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

"தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இரு சட்டமூலங்களின் பின்னணி பற்றி எமக்குப் பெரும் சந்தேகம்உள்ளது. தற்போதுதேர்தல் நெருங்கி வருகின்றது. அதில் சமூக ஊடகங்களின் பங்கு அதிகமாக இருக்கப்போகின்றது. அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலா இந்த ஆட்சி செயற்பட முனைகின்றது என்ற சந்தேகம் எமக்குள்ளது" என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ண.

"ஆட்சியாளர்கள் மேற்படி சட்ட மூலங்களை நடைமுறைப்படுத்தி தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த முனைகின்றனர். இதனால் வீழ்ச்சி அடைந்து வரும் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு பெரும் அச்சுறுத்தலான நிலைமை ஏற்படும். நாட்டின்சட்டவாட்சிமற்றும் ஜனநாகத்துக்கான அச்சுறுத்தல் ஏற்படுகின்றபோதெல்லாம்நாட்டின் பொருளாதாரத்துக்கானமீள்எழுகை குறைவடையும்" - என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய.

"பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை நாம் நிறுத்தவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால்; இந்த நாட்டின் அனைத்து மக்களினதும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் பறிக்கப்படும். இதன்மூலமாக உண்மைகள் அறியப்படுவதற்குத் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. மக்கள் உண்மைகளை அறிவிப்பதற்கு உரித்துடையவர்கள். ஆகவே அவர்களின் உரித்துக்களை பறித்து உண்மைகளை புதைப்பதற்கு இடமளிக்க முடியாது. அத்துடன் பொதுமக்களின் சிந்திக்கும் உரிமையானது கட்டுப்படுத்தப்படுகின்றது" - என்றார் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்.

## மின் கட்டணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சாதகமான முறையில் அனுமதி வழங்குவது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடமையல்ல, மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்பாவனையாளர்கள் சார்பில் இருந்து பொறுப்புடன் செயற்படவேண்டும்.

எரிபொருள்விலையேற்றத்தை போன்று தற்போது மின்கட்டணமும் முறையற்ற வகையில் அதிகரிக்கப்படுகிறது.மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் மின்சார விநியோக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இந்த ஆண்டு மாத்திரம் மூன்று தடவைகள் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. சடுதியான மின்கட்டண அதிகரிப்பால் மின்பாவனை குறைவடைந்துள்ளதால் தேசிய மட்டத்திலான தொழிற்றுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மின்கட்டணஅதிகரிப்பால் பலர் தொழில் வாய்ப்பினை இழந்துள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியுதவி தாமதமடைந்ததை தொடர்ந்து மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிக்க இந்த ஆட்சி அவதானம் செலுத்தியுள்ளது.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டில் மிகுதியாகவுள்ள சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை உட்பட ஆடை உற்பத்தி தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடையும்.

நாட்டில் கடந்த மூன்று மாத காலமாக நிலவிய வரட்சியால் நீர் மின்னுற்பத்தி பாதிக்கப்பட்டது. எதிர்கால தேவையை கருத்திற்கொண்டு மின்கட்டணத்தை அதிகரிக்க வலியுறுத்தியதாக மின்சார சபை குறிப்பிடுகிறது.

மின்பாவனையாளர்கள் மீது சுமையை திணிக்காமல் நிறுவன மட்டத்தில் செலவுகளை குறைத்துக் கொள்ள மின்சார சபை நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை - என்றார்.

## பொலிஸாரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும் ஒருவரும் ஐஸ் போதைபொருளை விற்பனை செய்யும் தோக்கில் 179 கிராம் எடை கொண்ட பொதி ஒன்றுடன் கடந்த சனிக்கிழமை இரவு முருங்கன் பாடசாலைக்குப் பின்புற மைதானத்தில் அரச நோயாளர் காவு வண்டியில்வருகைதந்தநிலையில் சந்தேகத்தின்பெயரில்அவர்களிடம் தாம்விசாரணைநடத்தமுற்பட்டனர் என்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த இரு நபர்களும் பொலிஸ் அதிகாரியை கடித்துவிட்டு தப்பிக்க முயன்றுள்ளனர். பிரதான சந்தேகநபரான முருங்கன் வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டிச் சாரதி தப்பி ஓடியுள்துடன் மற்றையநபரை பொலிஸார் கைது செய்து மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக போலீசார் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட வாகன சாரதி உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும்

சாரதி அன்றையதினம் மாலை 6 மணிமுதல்வைத்தியசாலையில் இருந்து காணாமல் போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரால் நோயாளர் காவு வண்டியும் சாரதியின் விடுதியும் சோதனையிடப்பட்ட பொழுது அங்கு போதைப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனடிப்படையில் சாரதி இன்று (நேற்று) எம்மால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதனால் நோயாளர் காவு வண்டியின் சேவை இரண்டு நாட்களாக இடைநிறுத்தப்பட்டு இன்று எமது விசாரணைக் குழுவினாரால் முழுமையாக சோதனை செய்யப்பட்டது.

அதில் போதைப் பொருட்கள் எவையும் இருக்கவில்லை என மன்னார்பிராந்தியசுகாதாரசேவைகள்பணிப்பாளர்வைத்தியர்வினோதன் மேலும் தெரிவித்தார்.

## சமூக ஊடகங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை சமூக ஊடகங்களை தவறாக பயன்படுத்துவதாகும். இதனை தவறாக பயன்படுத்துவதன் காரணமாக இளைஞர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குடும்ப பிணைப்புகளிலிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் ஊடாக மதங்களுக்கும் சிலர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். எனவே, சமூக ஊடகங்கள் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தினால், பிரச்சினைகளை உருவாக்கினால், அல்லது ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை தோற்றுவித்தால் அதனை கட்டுப் படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

சமூக ஊடகங்கள் மூலம் பாதிக்கப்பட்ட நபருக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காக இடம் ஒன்று இருக்கவேண்டும். அதுவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது - என்றார்.

## நாணய நிதியத்தின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியாளர்கள் எடுத்த தீர்மானங்களினால் ஒட்டுமொத்த மக்களும் இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாணய நிதியம் முன்வைத்த சகல தீர்மானங்களையும் கண்ணை மூடிக்கொண்டு இந்த ஆட்சி ஏற்றுக் கொண்டதன் விவைளை இன்று மக்கள் எதிர்கொண்டுள் ளார்கள்.

நாணயநிதியத்தின் வலியுறுத்தலுக்கு அமையமின்சாரகட்டணம் மீண்டும் உயர்வடையவுள்ளது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக அமுல்படுத்தினால் சமூக கட்டமைப்பில் அமைதின்மையே தோற்றம் பெறும். ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் குறித்து எதிர்தரப்புடன் ஆட்சியாளர்கள் பேச்சு நடத்தவில்லை.

ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை ஆட்சியாளர்கள் முழுமையாக அமுல்படுத்தவில்லை என சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது. நிபந்தனைகளை அமுல்படுத்தினால் மக்கள் போராட்டம் தோற்றம் பெறும். அது முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் - என்றார்.

## எதிர்க் கட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது விளக்கமளித்தார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி திட்டமிட்ட திகதியில் நடத்த திட்டமிட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தல், மக்களை அடக்கி கொண்டுவர முயற்சி செய்து வரும் பல்வேறு சட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோன் பெரேராவும் கலந்து கொண்டிருந்தார்.

## 6 மில்லின் டொலர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அசௌகரியங்கள் தொடர்பில் அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையடலை அடுத்து செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறீ லங்கன் எயார் லைன்ஸ் சரியான நேரத்தில் புறப்பட முடியவில்லை என்பதற்காக சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானங்களைப் புறக்கணிக்கவேண்டாம்

சிறீ லங்கன் விமானங்கள் புறப்படுவதில்தாமதம்ஏற்படுவதால், பயணிகளைமாற்றுவிமானங்களை பயன்படுத்துமாறு கூற வேண்டிய நிலை ஏற்படும். விமானங்கள் தாமதமானமை குறித்து அதிகாரிகள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர். எவ்வாறாயினும், சில அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய சம்பள அதிகரிப்பை தற்போதைக்கு வழங்க முடியாது.

கடந்த சில நாட்களாக சிறீ லங்கன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான விமானங்கள் தாமதமாகவே புறப்படுகின்றன. இதற்கான உரிய காரணத்தை விமான நிறுவனம் வெளியிடவில்லை. இந்நிலையில் தொடர்ச்சியாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றது-என்றார்.

## வாகன அனுமதிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒக்டோபர் 7 முதல் ஒன்லைன் முறையில் (சியூஸி 2.0) வாகனவருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சங்கமும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறைமையில் இந்தவேலைத்திட்டம்நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தி அடுத்த மாதம் மார்ச் மாதத்திற்குள் முழுமையாக ஒன்லைனில் கட்டணங்களை செலுத்தத் தேவையானஏற்பாடுகள்முன்னெடுக்கபட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டுக்குள் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் நாடு முழுவதும் அரச சேவையை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வேலைத்திட்டத்தை அடைவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் டிஜி - ஈகொன் (Digi - Econ) 2023 - 2030 வேலைத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தொழில்நுட்பக் கண்காட்சிகள், மாநாடுகள், டிஜிட்டல் துறையில் திறமைகளை வெளிப்படுத்திய இளைஞர், யுவதிகளை பாராட்டும் நிகழ்வுகள் போன்றன நடத்தப்படவுள்ளன. நாட்டில் புதிய திட்டங்களைத் தொடங்குவதற்கான டிஜிட்டல் முதலீட்டு மாநாடு ஒக்டோபர் 13 கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் நூற்றுக்கணக்கான முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

இது, நாட்டின் முதலீடுகளை வலுப்படுத்த உதவும். இந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவதே இந்த டிஜி-ஈகொன் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் குறுகிய காலத்தில் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்றும், இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.' என்றார்.

## கொடூர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளிட்டோர் கொழும்பின் சில இடங்களுக்குள் பிரவேசிப்பதை தடுத்து கோட்டை நீதிவான் நேற்றுக் காலையில் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, அனைத்துப் பல்கலைக்கழகமாணவர்ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுரன் சந்ரஜித், அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெல சிறிதம்ம தேரர், தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 8 பேர் மற்றும் அவர்களுடன் வருகை தருவோர் காலை 11 மணி முதல் மாலை 06 மணி வரையான காலப்பகுதியில் கொழும்பின் சில பகுதிகளுக்குள் பிரவேசிப்பதை தடுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, அவர்கள், ஜனாதிபதி செயலகம், பித்தளைச் சந்தி முதல் என்.எஸ்.ஏ. சுற்றுவட்டம், எஸ்.ஏ சுற்றுவட்டம் முதல் பாலதக்ஷ மாவத்தை வரையிலான பகுதி ஆகிய இடங்களுக்குள் பிரவேசிப்பதற்கு தடை ஏற்பட்டிருந்தது.

அத்துடன் அவர்கள் பொதுச் சொத்துகள்மற்றும்தனியார்சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களைத் தூண்டும் வகையில் வன்முறை செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது எனவும் குறித்த உத்தரவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பிற்பகல் 3மணியளவில் ஒன்றுகூடிய பல அமைப்புகளும், கோசங்களை எழுப்பியும், பதாகைகளை தாங்கியும் தமது போராட்டத்தினை முன்னெடுத்தனர். பேரணியைத் தவிர்த்திருந்தனர்.

## நீதித்துறை மீதான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இழுபறிகள், வங்குரோத்துக்குச் சென்றுள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழலிது.

இவ்வாறுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியடையவில்லை. பல்வகையான பொறிக்குள் நாடுள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாஷைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதன் ஊடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசமைப்பில்திருத்தம்செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகின்றன என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்கள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகாரவர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது. முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. இந்த ஆட்சி இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பெரும் நெருக்குதல்களுக்குநாடு உள்ளாவதைதவிர்க்க முடியாது போகும் - என்றார் அவர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு: தொலைபேசி இலக்கம் 076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# நாவிதன்வெளியில் யானை அட்டகாசத்தால் நெல் களஞ்சியசாலையில் பெருமளவு சேதம்

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அம்பாறைமாவட்டத்தின்நாவிதன்வெளி -சவளக்கடைபிரதேசத்துக்குள்சனிக்கிழமை இரவு புகுந்த யானைகள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள நெல் களஞ்சியசாலையை துவம்சம் செய்துள்ளன. மேலும், அங்கிருந்த நெல் மூடைகளை நாசப்படுத்தியதுடன் அப்பகுதியில் உள்ள சுற்றுவேலிகளையும் யானைகள் தகர்த்துள்ளன.

அதேவேளை அந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதியிலுள்ள சில பயிர்களுக்கும் பாரியளவில்சேதம்ஏற்பட்டுள்ளது. இதனால் இரவுவேளைகளில்அப்பகுதியில்வசிப்பதற்கு பொது மக்கள் அச்சப்படுகின்றனர். (05)



# யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது காட்டு யானை தாக்கு

## அநுராதபுரத்தில் சம்பவம்

அநுராதபுரம் - தந்திரிமலை பிரதான வீதியின் மணிங்கமுவ - ஓயாமடுவ பிரதேசத்தில்யாத்திரீகர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றை காட்டுயானைதாக்கியுள்ளது.



சனிக்கிழமை இரவு நடைபெற்ற தாக்குதலில் பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையிலிருந்து அநுராதபுரம்நோக்கி யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது இந்தக் காட்டு யானை தாக்கியுள்ளது.

இந்த யானை அப்பகுதியில் பல உயிர்களைக் கொன்றுள்ளதுடன், வீடுகளுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதற்கு முன்னரும் வீதியில் செல்லும் வாகனங்களைத் தாக்கியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (05)

# இ.போ.ச. பஸ் நடத்துநர் மீது தாக்குதல் பயணச்சீட்டு இயந்திரமும் சேதமானது

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தஇலங்கை போக்குவரத்துசபைக்குச் சொந்தமானபஸ்ஒன்றின் நடத்துநரை கெக்கிராவ பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் வைத்து மறித்து தாக்கிய இருவர் பயணச்சீட்டு வழங்கும் இயந்திரத்தையும் சேதப்படுத்தினர் எனக் கெக்கிராவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில்,சம்பவ இடத்துக்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களைக் கைது செய்ய முற்பட்டபோது சந்தேக நபர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த பஸ் அநுராதபுரத்திலிருந்துகொழும்புநோக்கிபயணிகளை ஏற்றிக்கொண்டுசென்றபோது கெக்கிராவ பொது மைதானத்துக்கு அருகில் வந்த இருவர், பஸ்ஸை மறித்து நடத்துநரை தாக்கி, அவரிடமிருந்த பயணச்சீட்டு இயந்திரத்தை சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர் ஒருவர் மறுநாள் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# இந்தியச் சுற்றுலாவி நுவரெலியாவில் சாவு

## மாரடைப்பால் விபரீதம்

இந்தியா குஜராத் மாநிலத்திலுள்ள ாதின் பரோடா பகுதியிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணம்மேற்கொண்டுநுவரெலியாவுக்கு வருகை தந்திருந்த 88 பேர் கொண்ட குழுவில் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இந்தியா குஜராத் மாநிலத்திலுள்ள ாதின் பரோடா பகுதியை சேர்ந்த ான் விஜயகுமார் ஜம்பக்லால் (வயது 67) என்பவரே என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபரும் அவரது மனைவி ான் ஜேத்தனா விஜயகுமாரும் 88 பேர் அடங்கிய குழுவாக கடந்த செப்ரெம்பர் 25 ஆம் திகதி இலங்கைக்கு சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டு கொழும்புக்கு வந்துள்ளனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் கொழும்பில் பல இடங்களுக்கு சென்று சுற்றுலா விஜயத்தை மேற் கொண்ட பின் கண்டிக்கு வருகை தந்தவர்கள், பின்னர் கடந்த 29ஆம் திகதி நுவரெலியாவுக்கு வருகை தந்து அரலிய சுற்றுலா ஹோட்டலில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது ான் விஜயகுமார் ஜம்பக்லாலுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. உடனே அவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்த நிலையில், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் மாரடைப்பால் உயிரிழந்தார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் உயிரிழந்த ான் விஜயகுமார் ஜம்பக்லாலின் உடல் இந்தியாவுக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும் என அவரின் மனைவி விடுத்த கோரிக்கைக்கு அமைய, உயிரிழந்தவரின் உடலை அவரின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# யாழ். சிறுப்பிட்டியில் படப்பகலில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் திங்கட்கிழமை பகல் ஓட்டோ ஒன்றில் பயணித்த இளைஞர் ஒருவரை 'பட்டா' ரக வாகனத்தில் வந்த நபர்கள் துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான லக்சன் என்பவர் மீதே வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. நாயன்மார்கட்டைச் சேர்ந்த குறித்த நபர் சிறுப்பிட்டியில்திருமணம்செய்துவசித்துவருகின்றார். இந்நிலையில், ஓட்டோவில் பயணித்த இந்த நபரைரை விரட்டிச் சென்று திங்கட்கிழமை பகல் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

தப்பியோடிய நபர் சிறுப்பிட்டி வைரவர் கோயிலுக்குள் புகுந்த போதும் அங்கு வைத்தும் அவரை வாளால் வெட்டி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. வீதியால்சென்றவர்கள் வாள்வெட்டால் காயமுற்ற இளைஞரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.(05)

# நீதிபதிக்கே நீதிகோரும் அவலத்தில் தமிழினம்

## சுகாஸ் தெரிவிப்பு

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் மற்றும் அவரது பதவி விலகல் என்பவை, ஸ்ரீலங்காவின் நீதித்துறைக் கட்டமைப்பு சுயாதீனமாக இல்லை என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

சிறீலங்காவின் நீதித்துறை சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கும், அதே மேலாதிக்கத்தின் பெயரால் நாட்டை நாசம் செய்தவர்களையும் சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும் சுதந்திரமாக நடமாட வைத்துள்ளது.

இந்த விடயங்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் சம்பவமாக நீதிபதி சரவணராஜாவின் சுயாதீன செயற்பாட்டுக்கு இடையூறான சட்டமா அதிபரின் தலையீடு மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் அமைந்திருந்தன.

ஸ்ரீலங்காவின்நீதித்துறையில்அரசியல்தலையீடு, சிங்கள -பௌத்த தேசத்தின் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே ஸ்ரீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவழிப்புக்கும் நடைபெற்றுவரும்கட்டமைக்கப்பட்டஇனவழிப்புக்கும் சர்வதேச நீதி விசாரணையை எமது அரசியல் இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

சிறீலங்காவின் அரச கட்டமைப்பு, நீதி கோரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அதற்காகக் குரல் கொடுத்த சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தி வந்ததன் தொடர்ச்சியாக இன்று நீதிபதிக்கே அச்சுறுத்தல் விடுத்து தீர்ப்பை மாற்றக் கோரும் அளவுக்கு மோசமாகச் செயற்பட்டிருக்கிறது. இந்த மோசமான நிலைமைக்கு எதிராகத் தமிழ் மக்கள் எழுச்சியடைய வேண்டும். இதற்கான நீதி கோரிய போராட்டங்களில் தமிழ் மக்களைக் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (05)

# ரூபாய் 9 லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் மீட்பு

## மன்னார் வாடியில் திருடப்பட்டவை

மன்னார் பள்ளிமுனை மீனவர் ஒருவரின் மீன் வாடியில் இருந்து திருடிச்செல்லப்பட்ட சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கற்பிட்டியில் வைத்து மீட்டுள்ளதோடு சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் மீன்பிடி வாடி, பள்ளிமுனை கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது.

குறித்த மீன்பிடி வாடியில் கற்பிட்டியைச் சேர்ந்த குறித்த நபர் தங்கியிருந்து மீன்பிடியில்ஈடுபட்டுவந்துள்ளார்.

இந்நிலையில், அவர் சில தினங்களுக்கு முன் மீன் வாடியில் வைக்கப்பட்டிருந்த படகுகளின் 2 வெளி இணைப்பு இயந்திரங்கள் (எஞ்சின்), அட்டை பிடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உட்பட சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, வாடியின் உரிமையாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன் பின்னர், மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பதில் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ராமநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணுக்க விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போதுபொருள்களைத் திருடிய நபர் கற்பிட்டி பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதுடன், அவர் திருடி விற்பனை செய்த பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளதோடு, மீட்கப்பட்ட பொருள்களும்மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இதுதொடர்பில்மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (05)

# தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிகோரும் உரிமையாளர் சங்கம்

டீசல் விலை அதிகரிப்பு காரணமாக தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என அகில இலங்கை தனியார் வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் கூறுகையில், பஸ் கட்டணத்தை குறைந்தது 5 சத வீதமாகவேனும் அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஓட்டோ டீசலின் விலை 10 ரூபாவாலும், சுப்பர் டீசலின் விலை 62 ரூபாவாலும் உயர்த்த சிபெட்கோ மற்றும் லங்கா இந்தியன்ஒயில்நிறுவனம்நடவடிக்கை எடுத்திருந்தன. (05)

# நிர்வாணப் பெண் சடலத்தின் தலையை இன்னும் காணோம்

## சபுகஸ்கந்த பொலிஸ் தொடர்ந்து தேடுதல்

சியாம்பலாப்பே தெற்கு பகுதியில் உள்ள சதுப்பு நிலத்தில் தலை மற்றும் கை, கால்கள் இல்லாத நிலையில் நிர்வாணமாக மீட்கப்பட்ட பெண்ணின் தலைப் பகுதி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம்கண்டெடுக்கப்பட்டசம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள சபுகஸ்கந்த பொலிஸார் வர்த்தகரான திருமணமான ஆண் ஒருவரைத் தேடி வருகின்றனர்.

குறித்த சந்தேகநபர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. கடந்தவெள்ளிக்கிழமை குறித்த பெண்ணின் சடலத்தை அவரது குடும்ப உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்டது. கொலை செய்யப்பட்ட பெண்ணின் மகள் மற்றும் பெண்ணின் சகோதரி ஆகியோர் அடையாளம் காட்டினர். அங்கொட பகுதியில் வசித்து வந்த தமவிட்ட குருகே பிரதீபா சில்வா என்ற 52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலத்தின்தலைமற்றும்கால்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால், அவரது உடலைப்பிரேதபரிசோதனை செய்ய இன்னும் சில நாள்களாகும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள்கள் விற்பனை

## சந்தேகநபர் கைது

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள்களை விற்பனை செய்துவந்த நபர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறைபகுதியில்உள்ளகுறித்தபாடசாலைமாணவர்களின்பெற்றோர்வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 27 வயதான களுத்துறை பகுதியை சேர்ந்தவர் என்பதோடு இவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரிடம் இருந்து 6.2 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைவஸ்துக்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த சந்தேக நபர் களுத்துறை மாவட்டநீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்படவுள்ளார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசின் தலையாய கடமை

பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். உலக சிறுவர் தினத்தின நிகழ்வு ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

“நாட்டில் நாற்பது இலட்சம் சிறுவர்கள் உள்ளார்கள். அவர்களின் எதிர்காலத்தினை நாம் இடைநடுவில் நிறுத்திவிடக்கூடாது. இலட்சக்கணக்கான சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை தொடர முடியதுள்ளார்கள். இந்த விடயம் பற்றிய அமைச்சர் என்னுடன் தற்போதும் கலந்துரையாடினார்.

நாங்கள் பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களையும், தோல்வி அடைந்தவர்கள் பற்றியும் தான் உரையாடுகின்றோம். கவனத்தைச் செலுத்துகின்றோம். ஆனால் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் சம்பந்தமாக யாரும் கவனத்தில் கொள்வதில்லை” என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பாடசாலை இடைவிலகல் குறித்து யாரும் கவனத்தில் கொள்வதில்லை என்பதன் மூலம் ஆட்சியாளர்களும் அது குறித்து அக்கறைப்படுவதில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வார் என்று எடுத்துக்கொள்ளலாம். இலங்கையில் ஆண்டு 13 வரைக்கும் கட்டாயக் கல்வி நடைமுறையில் இருக்கின்றபோதும் பாடசாலை இடைவிலகல் குறித்து அக்கறைப்படுவதில்லை என்பது பெரும் பாரதூரமான விடயம்.

மாணவர்களின் இடைவிலகல் அதிகரிப்புக்குப் பிரதான காரணம் பொருளாதார நெருக்கடி. 75 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களின் மோசமான செயற்பாடுகள் மற்றும் ஊழல் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அதற்குப் பொறுப்பேற்று மாணவர்களை மீண்டும் பாடசாலைகளுக்குக் கொண்டு வரும் பொறுப்பு ஆட்சியாளர்களுக்குரியது.

பொருளாதார நெருககடியினால் இடைவிலகல் மட்டுமல்ல மாணவர்கள் மத்தியில் மந்த போசனையும் அதிகரித்துள்ளது. இதனால் அவர்களின் கற்றல் திறன் மழுங்கடிக்கப்படுகின்றது. 3ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்னும் சுயமாக எழுதும் திறன் வாய்க்கப்பெறவில்லை என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலமைகள் எல்லாவற்றுக்கும்கூட ஆட்சியாளர்களே பொறுப்பேற்கவேண்டும். பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

மந்த போசனை, இடைவிலகல் என்பவற்றின் காரணமாக நாட்டின் எதிர்காலச் சந்ததி ஒன்று சீரழிந்து செல்வதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. அவற்றைச்சரிசெய்வதற்கானநடவடிக்கை எடுக்கப்படவேண்டும். கல்வி மட்டுமே எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கையை உயர்த்த முடியும் என்கிற நிலையில், இது தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அக்கறை செலுத்தவேண்டும். மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் திருப்பத் தவறுவது பெருங் குற்றமாக முடியும். எனவே பிரச்சினையை இனங்காட்டுவதோடு மட்டுமல்லாது அதற்கான தீர்வையும் காண வேண்டியது ஆட்சியாளர்களின் தலையாய கடமை.

# கற்பகதரு என்னும் அற்புதம்


# பயனளிக்கும் பனை மட்டை

அங்கம் –16



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

கங்குமட்டை கைத்தொழிலுக்குக் கைகொடுத்து நிற்கிறது என்று சொன்னால் நம்மனது நம்பமறு க்கிறது. பனையின் கங்குமட்டையா ? அது விறகாய் எரிக்க த்தானே எடுக்கிறோம். அதைக் கைத் தொழிலுக்குப் பயன்படுத்துவதா ? என்ன ... கதையா .. அளக்கிறீர்கள் என்றுதான்எம்மனமானதுஎண்ணியே நிற்கும். உண்மையில் - கங்குமட்டை கைகொடுக்கும் மூலப் பொருளை வழங்கும் நிலையில்தான் இருக்கிறது என்பதுதான் உண்மையாகும். கங்குமட்டை அளித்து நிற்கும் மூலப் பொருளாக இருப்பதுதான் பனந்தும்பு என்று பார்த்தோம். பனந்தும்பு என்று சொல்லி , அதன் வகை களையும் பார்த்த பின்னர்தான் கங்கு மட்டை கைகொடுக்கும் மட்டையாய் ஆகியிருக்கிறது என்பதை யாவரும் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று என்னுகிறேன்.









பனந்தும்பைக் கொண்டு - பலவிதமான துடைப்பங்கள் (பிரஷ்கள்) செய்யப் படுகின்றன. வீட்டைச்சுத்தம்செய்ய, கப்பலை சுத்தம் செய்ய, குதிரை வண்டி நிறுத்தும் இடத்தைச் சுத்தம் செய்ய, குதிரை கட்டப்படும் இடங்களைச் சுத்தம் செய்ய, இயந்திரங்களைச்சுத்தம்செய்ய, என்று பலநிலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது பனந்தும்பினால் ஆகிய பிரஷ்கள். பிரஷ்களை அதாவது துடைப்பங்களை பல தொழிற்கூடங்கள் சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்துவதால் - உலகின் பல நாடுகளில் பனந்தும் புக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடை த்திருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். கப் பல் கட்டும் தொழிற்சாலைகளும், வாகனங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களும், பனந்தும்பினாலாகிய பிரஷ்களை விரும்பிப் பயன்படுத்துகின்றன. அத்துடன் பெற்றோலிய , இரசாயன ஆலைகளைத் துப்பரவு செய்யவும், வீதிகளைத் துப்பரவு செய்யவும் ஆகிய வகையில் - நாற்பத்து ஏழு வகை யான தொழில்களில் பனந்தும்பினாலாகிய துடைப்பங்கள் உதவி நிற்கின்றன என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும்.

கங்குமட்டையிலிருந்து பனந்தும்பை எடுப்பதற்கு பல கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. கங்கு மட்டையிலிருந்து தும்பினை எடுக்கும் முறை பெரும்பா லும் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்று வருகிறது என்பதும் நோக்கத் தக்கதாகும். அதனால் அங்கு பயன்படுத்தப்படுகின்ற பொருட் களும் சாதாரணமான கருவிகளாகவே அமைந்திருக்கின்றன. கங்குமட்டையினை வெட்டவும் , பின் உரிக்கவும் பயன்படுவது கத்தி ஆகும். கங்குமட்டையினை வைத்து அடிப்பதற்கு பொருத்தமாய் அமைவது அடைக்கல் என்று அழைக்கப்படுகிறது. இதனை அடிக்கும் கல் என்றும் சொல்லுவார்கள். மரக்குத்தி என்றும் பெயர் பெறுகிறது. அடிக்கும் கல்லில் வைத்து கங்குமட்டையினைத் தட்டுவதற்காக அமையும் கருவி தட்டுப்பொல்லாகும். இது மரத்தால் அமைந்திருக்கும். தும்பினை அடிப்பவர்கள் இருப்பதற்குப்பயன்படுத்தப்படும் வகையில் மரத்தால் ஆகிய பலகை வந்து நிற்கும். தும்பினை வாருவதற்கு அமைந்திருக்கும் கருவி சீப்பு என்று அழைக்கப்படுகிறது. தட்டுப் பொல்லினால் அடித்தபின் வருகின்ற பனந்தும்பு - சீப்பில் வைத்து வாரப்படுகிறது. வாரப்படுவதற்கான காரணம் என்ன வென்றால் , மூலத் தும்பிலுள்ள கழிகவுகளை எடுக்க வேண்டும் என்பதேயாகும். கழிவினை எடுத்தால்த்தான் நல்ல தும்பினை எடுத்துப் பயன்படுத்தலாம்.

கங்குமட்டையிலிருந்து தும்பினை எடுக்கும் முறை கவனிக்கப்பட வேண்டிய நுட்பமாய் அமைகிறது எனலாம். கங்கு மட்டையில் இரண்டு பகுதி கள் காணப் படுகின்றன. அந்தப்பகுதி கள் முதலில் தனித்தனியே பிரிக்கப்படுகின்றன. பிரித்து எடுக்கப்பட்ட கங்கின் உட்பகுதியில் இருக்கின்ற தோல் கத்தியினால் மெது வாக இழுத்தெடுக்கப்படுகிறது. கங்கு மட்டையின் உட்புறத்தோல் பிரிக்கப்பட்டவுடன் கங்குமட்டை பிரியும். அப்படிப் பிரிவதனால் அதிலிருந்து தும்பினை எடுப்பது இலகு- வாய் இருக்கும். உட்தோலைப் பிரிக்காமலேயே - தட்டுப்பொல்லினால் - அடிக்கும் கல்லின் மீது அடித்தும் தும்பினைப் பெற்றுக் கொள்ளும். நிலையும் காணப்படுகிறது. இப்படிவருகின்ற தும்புகளை- , தும்பு வாருவதற்கு இருக்கும் கருவியினால் வாரும் பொழுது . அங்கே காணப்படும் சோற்றுப் பாகம் களையப்படுகிறது. மேலும்மைரிழைபோன்று காணப்படுகின்ற தும்புகளும் களையப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். கங்கு மட்டையினி ன்றும் கிடைக்கும் தும்பானது ஈரமாய் இருக்கும். அப்படியிருக்கும் தும்புகளை சிறு சிறு முடிச்சுகளாகக் கட்டி ஈரம் உலர்வதற்காக வெய்யிலில் வைக்கப்படு கிறது. இப்படியாக உலர்ந்துவரும்பனந்தும்புகோரா என்னும் பெயரைப் பெறுகிறது.

கோரா தும்புகள் முன்று வகையாய் தரம் பிரிக்கப்படுகின்றன. உறுதியான கறுப்பு அதாவது இதை பிரைம் ஸ்டிப் என்றும் , இதற்கு அடுத்ததை மத்திய தரம் என்றும், மென்மையானது என்னும் நிலையில் மூவகையாகப் பிரிக்கப்படுகிறது. முதலாம் தரமாய் இருக்கும் பனந்தும்பு , கங்குமட்டையின் இரண்டு ஓரங்களிலும் அமைந்திருக்கும் கறுப்புநிறத்தில் இருக்கும். இப்படிக் கறுப்பு நிறத்தில் இருக்கும். இத்தும்பானது மிகவும் உறுதியானதாகவே காண ப்படுகிறது. உறுதியானதாக வருகின்ற முதல்நிலைப் பனந்தும்புகள் பிரித்தெடுக்கப்படுகிறது .பின் அவற்றை தனியே சுத்தம் செய்- யப்படுகிறது. தும்பின் நீளத் துக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுகிறது. எண்பது விகிதம் கறுப்புக் கலந்த தும்பாக எடுத்து அவை சந்தைப்படுத்தப்படுகின் றன. கோராவின் அடுத்த நிலையில் தெரிவாவது மத்தியதரப்பனந்தும் பாகும். முதலாம் தரத்தைப் பிரித்தபின் வருகின்ற உறுதியான கறுப்பும் வெள்ளையும் கலந்துஇம்மத்தியதரப்பனந்தும்பு காணப் படும்.

இவ்வாறு மத்தியதரமாய் பிரிக்கப்படும் தும்பு காய விடப்படுகிறது. அதன் பின் நீரில் ஊறவைக்கப்படு கிறது. நீரில் ஊறவைக்கப்பட்ட பின்னர் சீப்பில் இடப் பட்டு சுத்தம் செய்யப்பட்டு - தும்பின் நீளத்துக்கு ஏற்றவாறு பிரிக்கப்படுகி றது.

அதன் பின்னர் அளவுக்கு உகந்தவாறு வகை வகையாய்

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டப்பட்டு சந்தைப் படுத்தப் படுகிறது,இவ்வாறு மத்தியதரமாய் இருக்கும் பனந்தும்பில் ஐம்பத்து ஐந்து பாகம் வெள்ளையாயும் நாற் பத்து ஐந்து பாகம் கறுப்பாயும் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கோரத்தும்பிலிருந்து இரண்டு வகை யான தரங்களும் பிரிக்கப்பட்ட பின்னர் இருக்கும் பனந்தும்பு மூன்றாந்தரமாய் வந்து அமைகிறது. இந்த மூன்றாந் தரமாய் ஆகியிருக்கும் பனந்தும்புகள், துடைப்பங்கள் செய்யப் பயன்படுவதோடு நாற்பத்து ஏழு வகையான தொழில்களுக்கும் பயனாகி இருக்கிறது என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பனந்தும்பானது நல்ல சந்தைவாய்ப்பினைப் பெற்றதாக இருக்கிறது. இதனால் இந்தியாவில் பல இடங்களிலும் , இலங்கையிலும் பனந்தும்பு உற்பத்தி நடை பெற்றுவருகிறது என்பது குறப்பிடப்பட வேண் டியதாகும். இந்தவகையில் இந் தியாவில் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், ஒரிசா மாநிலங்களைக் குறிப்பிடலாம்.ஆந்திராவில் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் கர்நூல் பகுதிகளில் பனந்தும்பு எடுக்கப்படுகிறது. இங்கு எடுக்கப்படும் பனந்தும்பானது – நல்ல விறைப்பானதாயும் , நீளமானதாயும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் இங்கு காணப்படும் பனைகளின் நல்ல வளர்ச்சியே எனலாம்.இங்கு தரமான கறுப்புரகத் தும்புகள் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பல மாவட்டங்களில் பனந்தும்பு கிடைக்கும் நிலை காணப்படுகிறது. அந்தவகையில் – இராமநாதபுரம், தூத்துக்குடி, திரு நெல்வேலி, நாமக்கல், ஈரோடு, சேலம், கோயமுத்தூர், மாவட்டங்கள் அமைந் திருக்கின்றன.இங்கெல்லாம் பனந்தும்பானது கிராமியத் தொழிலாகவே விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கன்யாகுமரி மாவட்டங்களில் கல்குளம், விலவங்கோடு, மாவட்டங்களில் அதிகமாய் பனந்தோப்புகள் காணப்படுகின்றன.தமிழகத்தின் உயர்ந்த வகை யான பனந்துப்பு இப்பகுதியிலேயே கிடைக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். தும்பினைச் சேகரிப்பது, அவற்றைச் சுத்தஞ் செய்வது, தரம்பிரிப்பது, சாயம் இடுவது என்னும் வகையில் இங்கிருப்பவர்களின் செயற்பாடு மிகவும் சிறப்பாகவே இருப்பதாய் அறிய முடிகிறது. வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றவகையில் இவர்களின் செயற்பாடு அமைந்திருக்கிறது என் பதையும் கட்டாயம் சொல்லி யேயாக வேண்டும். ஐம்பத்து ஐந்து கிலோ பனந்தும்பைச் சுத்தஞ் செய்தால் அதிலிருந்து ஐம்பத்து இரண்டு கிலோ நல்ல தும்பு கிடைக்கிறது என்பதும் நோக்கத்தக்தாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைக்கும் தும்பு வெள்ளை நிறமாய் இருக்கிறது.வெள்ளையாய் இருந்தாலும் விறைப்பினை உடையதாக இருக்கிறது. பால் வெள்ளை என்னும் பெயரில் இப்பகுதிப் பனந்தும்பு ஏற்று மதி செய்யப்படுகிறது..

இராமநாதபுரம் மாவட்டத்தில் – கீழக்கரை, திருப்புல்லாணி, ரெட்டைப்பூரணி, கன்னி ராஜபுரம், மூகையூர், நரிப்பையூர்,சாயல்குடி, ஆகிய இடங்களில் பனந்தும்பு எடுக்கப்படுகிறது. இங்கு கிடைக்கும் பனந்தும்பானது நடுத்தரமானதாகவே இருக்கிறது. இராமநாதபுரத்தின் கிழக்கே வடலிப் பனைகள் நிறை யவே காணப் படுகின்றன. இதனால் இங்கு பனந்தும்பு உற்பத்தி சிறப்பாக இருக்கிறது..

திண்டுக்கல் மாவட்டத்தில் – ஒட்டன்சத்திரம், மேலப்பட்டி, வேடசந்தூர், போன்ற இடங்களில் பனந்தும்பு அதிகமாய் கிடைக்கிறது. கரூர் மாவட்ட த்தில்– சின்னத்தாராபுரம் , கரூர், அரவக் குறிச்சி, ஆகிய இடங்களும் பனந்தும்பினை தந்து நிற்கின்றன. தமிழகத்தில் பனந்தும்பினைச் ஆண்டு முழுவதும் சேகரிப்பதில்– சேலம், நாமக்கல் மாவட்டங்கள் முதன்மை பெற்று நிற்கின்றன. சங்ககிரி, தொளசம்பட்டி, மேச்சேரி , செங்கோடு, சலகண்டபுரம், வையப்பமலை, கொளத்தூர், கொங்கணபுரம் , ஆகிய இடங்களில் பனந்தும்பு தாராளமாய் கொள்வனவு செய்யப் படுகிறது.



சேலம் மாவட்டதில் இருக்கும் – தொளசம்பட்டி, மேச்சேரி, தீராம்பட்டி ஆகிய இடங்களில் கோரா அதிகள வில் கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கும் கோரா ஈரம் நிறைந்ததாகவே இருக்கிறது. தொள சம் பட்டியிலும் , மேச்சேரியிலும் ஒரு சந்தை இருக்கிறது. தொளசம்பட்டியில் அமைந்திருக்கும் சந்தைக்கு, மல்லிக் குட்டை என்னும் பகுதியிலிருந்தும் –மேச்சேரிச் சந்தைக்கு, குட்டம் பட்டி, தீரா ம்பட்டி, தண்ணீர் குட்டப்பட்டி , பகுதிகளிலிருந்தும் அதிகளவு ஈரமான பனந்தும்பு கொண்டு வரப் படுகிறது என்பது நோக்கத்தக்கதாகும். சேலம் மாவட்டத்தில் , தொள சம்பட்டி, கொளத்தூர், பகு திகளிலும் ; திருச்செங்கோடு பகுதியிலும் பனந்தும்பு சுத்தம் செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் – கன்னிவாடி, வெள்ளக்கோவில்,சென்னிமலை, பெருந்துறை,தாராபுரம் , மூல னூர், முத்தூர், காங்கேயம், ஆகிய இடங்களில் பனந்தும்பு எடுக்கப்படுகிறது.நீளமான பனந்தும்பு இங்கு இருக்கும் சென்னிமலை யில் கிடைக்கிறது என்பது நோக்கத்தக்கது.இந்த நீளமான தும்பு சீப்பிடப்படு கிறது. இப்பகுதியில் எடுக்கப்படும் பனந்தும்பானது நீளத்துக்குத் தகுந்த வாறு ஏ தரம் , பி தரம் , சி தரம், என்னும் நிலையில் தரநிர்ணயம் செய்யப்படுகிறது. இப்படித் தரம் பிரிப்பதால் இதற்கு சென்னிமலை அளவு என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் மதுரைக்காடு, பட்டுக்கோட்டை, போன்ற இடங்களில் பனந்தும்பு பெருமளவில் எடுக்கப்படுகிறது.நல்ல தரமான தும்பானது , மரைக் காடு என்னுமிடத்தில் கிடைக்கிறது.கறுப்பு நிறம் குறைந்திருந்தாலும் நல்ல விறைப்பானதாய் இங்கு கிடைக்கும் பனந்தும்பு இருக்கிறது.இப்ப குதியில் எடு க்கப்படும் கோரத்தும்பானது – சுத்தம் செய்யப்பட்டு, காயவிடப்பட்டு , ஒரு தடவை சீப்பில் இடப் பட்டதாகவே இருக்கிறது என்பது முக்கியமாகும். மற்றைய மாவட்டங்களில் இவ்வாறு செய்யப் படுவது இல்லை என்பதும் கவனத்துக்குரியதேயாகும்.இவ்வாறு சுத்தமாய் வருகின்ற நிலையில் அந்தத் தும்பு சீப்பிட்ட கோரத் தும்பு என்று அழைக்கப்படுகிறது. பனந்தும்பினை எடுப்பதில் புதுக்கோட்டை மாவட்டமும் அடங்குகிறது.

இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டம், பருத்தித்துறை, புலோலி, சாவகச்சேரி, பேசாலை, தலைமன்னார், கைதடி, ஆகிய பகுதிகள் பனந்தும்பினை வழங்கி நிற்கும் பகுதிகளாக விளங்குகின்றன.எனினும் பனந்தும்பு எடுக்கும் நிலை பெருதாக விருத்தி யடையாது இருக்கிறது என்று அறியக்கிடக்கிறது. இந்தியா போன்று குறிப்பாக தமிழக மாவட்டங்கள் போன்று –பனந்தும்பினை எடுக்கும் முயற்சி இலங்கையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.இலங்கையில் நிறையவே கற்பகதருவாம் பனையானது காணப்படுகிறது என்பது கவனத்துக்குரியதாகும்.

(வளரும்)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# பேசாலையில் பலவந்த காணி சுவீகரிப்பு மின்சார சபைக்கு மக்கள் பலத்த எதிர்ப்பு

## உடன் நிறுத்தவும் வலியுறுத்து

மன்னாரில் இலங்கை மின்சார சபை காற்றாலை அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் மக்களின் காணிகளை, அவர்களின் சம்மதமின்றி கையகப்படுத்துவதற்கு பேசாலை மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளாரின் ஏற்பாட்டில் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் பேசாலை பங்குத் தந்தை பணிமனையில் மன்னார் பிரஜைகள் குழு பங்களிப்புடன் பேசாலை மக்களுடனான விடே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மக்களால் இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்களாக மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவில் அபிவிருத்தி என்ற போர்வையில் இன்று வீட்டு வாசல் வரையும் இவ்வாழ் மக்களை நசுக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே மன்னார் தென் கடலோரப் பகுதியில் 100 மெஹா வோட் காற்றாலை மின் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

இது இங்குள்ள மக்களின் எவ்வித ஆலோசனைகளும் இன்றியே அமைக்கப்பட்டுள்ளது.

இருந்தும் இந்தக் காற்றாலை அமைக்கும் திட்டத்தை இவ்வாழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தத் திட் டம் எமது நாட்டில் உருவாக வேண்டும் என்பதும் எங்கள் விருப்பமாகும்.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பகுதியில் அதாவது பேசாலைப் பகுதியில் முதல் காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் இன்று வரை இப்பகுதி மக்கள் வாழ்வாதார ரீதியாகவும் அனர்த்தம் ரீதியாகவும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த பிரச்சினைகள் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது கருணைமிக்க பதில்கள் மட்டும் எமக்கு கிடைக்கப்பட்டன. ஆனால் இதற்கான தீர்வுகள் அசமந்த போக்கிலேயே இருந்து வருகின்றன. முன்னர் ஏற்படுத்தப்பட்ட காற்றாலைகளுக்கு 200 ஏக்கர் நிலங்கள் கையளிக்கப்பட்டன. மன்னார் தீவு 5 கிலோ மீற்றர் அகலம் கொண்டது.

இதற்குள் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்குள் இவ் காற்றாலைகள் அமைக்கப்படுவதால் அதாவது மக்கள் குடியிருக்கும் பகுதிக்குள் இவைகள் அமைக்கப்படுவதால் மக்கள் சொல்லொன்னா துன்பங்களுக்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது. அதுமட்டுமல்ல காணி உரிமையாளர்களின் எந்தவித சம்மதமும் இன்றி அவர்களின் காணிகள் தந்திர உபாயமாக அபகரிக்கப்பட்டும் வருகின்றது. மன்னார் தீவில் தொடர்ந்து காற்றாலை அமைக்கும் பணிகள் தொடருமாகில் இத்தீவில் வாழும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலையும் தற்பொழுது உருவாகியுள்ளது.

ஆகவே இது தொடர்பாக உயர் அதிகாரிகளை இங்கு அழைத்து வந்து சரியான முறையில் கலந்துரையாடாமல் தற்பொழுது விரிவுப்படுத்தும் வேலைத் திட்டங்களைஉடன்நிறுத்துமாறுஇம்மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.(05)

# பஸ்ஸிலிருந்து வெளியே வீசப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

## மின்னேரியாவில் சம்பவம்

கதுருவெலயிலிருந்து மெதிரிகிரிய நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் கீழே தூக்கி வீசப்பட்டதில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ் கிரித்தல குளத்துக்கு அருகில் உள்ள வளைவில் சென்றுகொண்டிருந்தபோதே அவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்வர்ணலதா என்ற 59 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து பஸ் சாரதி மின்னேரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# பாணந்துறை ரயில் நிலையத்தில் மோதல் அதிபர் ஊழியர் உட்பட மூவருக்குக் காயம்

## தந்தையும் மகனும் கைது

பாணந்துறை ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்களுக்கும் மற்றுமொரு குழுவினருக்கும் இடையில் திங்கட்கிழமை ஏற்பட்ட மோதல் காரணமாக ரயில் நிலைய அதிபர், ஊழியர் ஒருவர் மற்றும் மற்றுமொருவர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனப் பாணந்துறை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தந்தையும் மகனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மகன் பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார் எனவும் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாணந்துறை சாகர மாவத்தையில் வசிக்கும் 50 வயதுடைய ஒருவரும் 23 வயதான அவரது மகனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். ரயில் பயண சீட்டு பெறுவது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் அடிப்படையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# அரைவாசி இலங்கையர்கள் நாளாந்தம் புலிகளுக்குப் பணம் கொடுக்கின்றனர்

## கெமுனுவின் கண்டுபிடிப்பு

நாட்டின் ஐம்பது வீதமான மக்கள்; விடுதலைப் புலிகளின் புலம்பெயர் வலையமைப்பிற்கு நாளாந்தம் ஒரு ரூபாவாவது செலுத்துகின்றனர் என இலங்கை தனியார் போக்குவரத்து சங்க தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பும் ஐ.எஸ். அமைப்புமே தற்போது அதிகளவு நிதியை பெறும் பயங்கரவாத அமைப்புகள் என அவர் தெரிவித்துள்ளார்.

நான் மேற்கொண்ட ஆய்வின் போது இது தெரியவந்தது என தெரிவித்துள்ள அவர் அநேக நிதி நிறுவனங்கள் விடுதலைப் புலிகளின் நிதியிலேயே இயங்குகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தாங்கள் சேகரித்த பணத்தை உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு வழங்குகின்றனர் அரச ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் அவர்களை நம்பியே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளை விடுதலைப்புலிகளும் ஐஎஸ் அமைப்பினரும் குழப்புவதால் பொலிஸார் இது குறித்து விசாரணைகளைமேற்கொள்ளமுடியவில்லை என குறிப்பிட்டுள்ள கெமுனுவிஜயரட்ண இதன் காரணமாகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கும் உத்தேச ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்ட-மூலத்துக்கும் எதிர்ப்பு உருவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ஒரே வீதியில் சில மாதங்களில் 5 ஓட்டோக்கள் தீப்பற்றி நாசம்

## கம்பளையில் சம்பவம்



கம்பளை நகரின் ஊடாகச் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று வைத்தியசாலைக்கு அருகில் திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமானது.

தம்பதிகள் மற்றும் அவர்களது பிள்ளைகள் கம்பளை மில்லகஹமுல பிரதேசத்திலிருந்து இந்த ஓட்டோவில் பயணித்துள்ளனர்.

அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளை பெற்றுக்கொண்டு சுமார் 50 மீற்றர் முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இருப்பினும், தீயை அணைக்க முயற்சித்த போதும் ஓட்டோ முற்றாக எரிந்து நாசமானது.

இதேவேளை, கம்பளை மாநகர சபைக்குள் தீயணைக்கும் பிரிவு இன்மையால் இவ்வாறான சம்பவங்களின்போது தீ பரவி அழிவை ஏற்படுத்துவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 5 ஓட்டோக்கள் தீக்கிரையாகியுள்ளன. (05)

# மல்வத்தை மகாநாயக்கர் போல நடித்து மோசடியில் ஈடுபட்ட நபர்

## நுவரெலியாவில் கைது

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மல்வத்து மகாநாயக்க தேரரைப் போல் பேசி வெளிநாட்டுவேலைவாய்ப்புகளை பெற்றுத்தருவதாக போலியான தகவல்களை வழங்கிய நபர் ஒருவரை நுவரெலியா பொலி-ஸார் கைது செய்துள்ளனர் என நுவரெலியா பொலிஸ் நிலைய பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியா-ராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பகுதியில் வசிக்கும் ஒருவரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் காலிபிரதேசத்தைச்சேர்ந்த 51வய-துடையவர் எனவும் தற்காலிகமாக அவர் பிலிமத்தலாவை பகுதியில் வசித்துவருபவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்மற்றும்காணிவிற்பனை தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவரும், விளம்பரங்களில் உள்ள தொடர்பு இலக்கங்களுக்கு மகாநாயக்கதேரரை போன்று தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளார். பின்னர் குறித்த சந்தேகநபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி அவர்களிடம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபரிடம் நடத்திய சோதனையில் 11 கையடக்க தொலைபேசிகள் ,120 சிம் காா்டுகள், மின்கலங்கள் உள்ளிட்ட பல இலத்திரனியல் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், பல்வேறு அரச அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள் மற்றும் கிராம அலுவலகர்களால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள் உட்பட ஏராளமான போலி ஆவணங்கள், வங்கி புத்தகங்கள் மற்றும் வங்கி பற்றுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இந்த சம்பவத்தில் மேலும் சிலருக்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதிகைதுசெய்யப்பட்டுநுவரெலியா நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தியபோது இவரை இம்மாதம் 12ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான மற்றும் நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி ஆகியோரின் பணிப்புரையின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய கட்டளைத் தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் ராஜசிங்க தலைமையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பரிசு கொடுக்க வந்ததாகக் கூறி 5 பவுண் தங்கசங்கிலி அபகரிப்பு

திருகோணமலை - துறைமுகப் பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட கிறீன் வீதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை சுமார் பதினொரு மணியளவில் பரிசு கொடுக்க வந்துள்ளதாக கூறி வீட்டுக்குள் வந்த வாலிபர் ஒருவர் வீட்டில் இருந்த மூதாட்டியிடம் இருந்து ஐந்து பவுண் தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளார் எனத் துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

இலக்கத்தகடு இல்லாத இரு சக்கரவாகனத்தில்வந்தஓர்இளைஞரால் மேற்படி கொள்ளை இடம்பெற்றதாக துறைமுகப்பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையனை துரத்திச்சென்ற ஒருவரின் தகவலின் அடிப்படையில் தேடுதல் நடைபெறுவதாக துறைமு-கப்பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பொலிஸ் கான்ஸ்டபிள் கையை கடித்து தப்பிச் சென்றார் அம்பியூலன்ஸ் சாரதி!

ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் அம்பியூலன்ஸ் சாரதி ஒருவரைக் கைது செய்ய சென்ற மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கையைக் கடுமையாக கடித்து விட்டு அவர் தப்பிச் சென்றார் என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் முருங்கன் வைத்தியசாலையில்சிகிச்சை பெற்று வருகிறார். மன்னார் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் முருங்கன் வைத்தியசாலை பிரதான நுழைவா-யிலுக்கு அருகில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரைக் கைதுசெய்ய முற்பட்ட போதே இவ்வாறு சந்தேகநபர் கையைக் கடித்து விட்டு தப்பிச் சென்றார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கிழக்கு மாகாணத்திற்கு புதிய கல்விப் பணிப்பாளர்

## சுஜாதா பதவியேற்றார்

(வி.ரி.சகாதேவராஜா)



கிழக்கு மாகாண பதில் மாகாண கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் நேற்று திங்கட்கிழமை கடமையேற்றார்.

கிழக்குமாகாணகல்விபணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தனது 60ஆவது வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள் நுழைந்த இவர், 2017இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர உத்தியோகத்தராகப் பதவி உயர்த்தப்பட்டவர்.

இள வயதில் மட்டு. வின்சென்ட் மகளிர் தேசியப் பாடசாலை அதிபராகவும் கடந்த நான்கு வருடங்களாக மட்டு. வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், மிக இளவயதில் மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார். இவர் 2035 வரை தொடர்ந்து கடமையாற்ற வாய்ப்புள்ளது.

கிழக்கில் தொடர்ச்சியாக பெண்மணிகள் மாகாண கல்வி பணிப்பாளர் பதவியை அலங்கரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தொடர்ந்து அகிலா கனகசூரியம் இன்று சுஜாதா குலேந்திரகுமார் பதவியேற்றுள்ளார்.

## சிறுவர் தினத்தில்

# சகல மாணவர்களுக்கும் உணவளித்த ஆசிரியர்கள்

(காரைதீவு சகா)







சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வில் பாடசாலையில் பயில்கின்ற சகல மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மதியபோசனத்தை மனமுவந்துவழங்கிய நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில் உள்ள நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது .

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.. பிரதம அதிதியாக பாடசாலை இணைபாளரும் உதவிகல்வி பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

அங்கே மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் நடந்தன. கயிறுஇழுத்தல் போட்டி, சங்கீதக் கதிரை ,சங்கீத தொப்பி மற்றும் பாடல் பேச்சு என்பன இடம் பெற்றன. வெற்றிபெற்ற அனைவருக்கும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இறுதியில் 500 மாணவர்களுக்கும் புரியாணி உணவு ஆசிரியர்களின் முழுப் பங்களிப்போடு வழங்கப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# காலநிலை மாற்றத்தை பூகோள அவசர நிலையாக 65 வீத ஆசிய, பசுபிக் மக்கள் இனங்கண்டடுள்ளனர்

## நஸீர் அஹமட் தெரிவிப்பு

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 63 சதவீதமான மக்கள் காலநிலை மாற்றத்தை பூகோளத்தின் அவசர நிலையாக இனங்கண்டுள்ளனர் என சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இப்பிராந்தியத்திலுள்ளஇளைஞர், யுவதிகளே இதனால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இது தொடர்பில் மக்கள் பிரநிதிகளின் பங்களிப்பு போதியளவில் இல்லை என்று இளம் தலைமுறையினர் கவலை கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்திய இளைஞர்கள்போரத்தின்அமைச் சர்கள் மற்றும் சூழலியல் அதி காரிகளுக்கான 5 ஆவது போரம் ஐ.நா. அலுவலக முன்றிலில் நடைபெற்றபோதே அவர் இதனை தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில் -

ஆசிய பசுபிக் பிராந்தியம் அதன் சுற்றாடல் பிரச்சினைகளை கையாள இளைஞர்களின் பங்களிப்பை அவசியமாகவும் அவசரமாகவும்வேண்டிநிற்பதாவும் தெரிவித்த அவர், அந்த வகையில் இந்த போரம் ஒரு மைல்கல்லாக அமைவதாகவும் தெரிவித்தார்.

நிலை பேராண்மை அற்ற உற்பத்தி மற்றும் பயன்பாடு என்பனவற்றால் ஏற்பட்டுள்ள சுற்றாடல்,சமூகமற்றும்பொருளாதார பிரச்சினைகளை நாடுகள் எதிர்கொள்வதாகவும் அவற்றை தீர்க்கவேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். (05)

# சர்வதேச சிறுவர் உரிமைகள் இங்கு நடைமுறையில் இருக்கின்றதா?

## மனித அபிவிருத்தி தாபனத்தின் பணிப்பாளர் சிவப்பிரகாசம் கேள்வி







(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர் உரிமை ஒப்பந்தம் இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் எவ்வாறு காணப்படுகின்றது என்ற மாபெரும் கேள்வி எம் முன் எழுந்து நிற்கின்றது .

இவ்வாறு மனித அபிவி ருத்தி தாபனத்தின் ஸ்தாபக பணிப்பாளர் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம், கொட்டகலை யில் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் தலைமையுரை யாற்றும்போது குறிப்பிட்டார். மேற்படி அமர்வு கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியில் நேற்று நடைப்பெற்றது..

இதற்கு ஆலோசனை மற்றும் அனுசரனைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செய லகம், சுகாதார பணிமனை மற்றும் சிவில் கூட்டமைப்பு என்பன வழங்கியிருந்தன. .

கலாநிதி. பி.பி. சிவப்பிரகா சம் தொடர்ந்து உரையாற் றும்போது தெரிவித்ததாவது:

இலங்கையை பொறுத்த வரையில் சிறுவர் தினமா னது ஒக்டோபர் முதலாம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்த தினமானது, வெறுமனே கொண்டாடுவதற்கான தினம் மட்டுமல்ல, சிறுவர்களுக்கு எதிரான பாகுபாடு, வன் முறை, பாலியல் துஸ்பிர யோகம், சித்திரவதை என்ப வற்றிலிருந்து அவர்களை விடுதலை செய்வதற்கான அல்லது அவற்றிற்கு எதிராக போராடுவதற்கான களத்தை யும் உறுதிப்படுத்துகின்ற ஒரு நாளாகவே நான் கருது கின்றேன்.

200 வருட மலையக மக்களின் வரலாறும், ம லையகச் சிறுவர்களின் இன் றைய நிலைமையும் உலகில் உள்ள அனைத்து சமூக அமைப்புகளிலும், சிறுவர்கள் முக்கிய வகிபாகத்தினை கொண்டுள்ளனர். 18 வய திற்குக் குறைந்தவர்களை சிறுவர்களாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்திவுள்ளது. 1990களில் நடைமுறைக்கு வந்த சர்வதேச சிறுவர் உரிமை சாசனம் சிறுவர்களுக்கான உரிமை குறித்து பேசுகின்றது.

சிறுவர்கள் ஒரு விசேட குழுவினர் என்ற அடிப்படை யில், அவர்களின் உரிமை கள் குறித்து ஐக்கிய நாடு கள் சபையினால் இந்த சிறு வர் உரிமை சாசனம் அங் கத்துவ நாடுகளிடையே நடைமுறைப்படுத்தலை ஊக்குவிக்கின்றது.

இலங்கை 1991 ஆம் ஆண்டு இச்சாசனத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

மலையகத்தை பொறுத் தவரையில் 200 வருடங்கள் வரலாற்றை குறித்து பேசிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இந்த வரலாற்றுக் காலக்கட்டத்தில் சிறுவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல, ஒட்டு மொத்த மலையக சமூகத் திற்கு எதிரான மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றே வருகின்றது. சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, விளையாட்டு,சுதந்திரம்போன்ற பல்வேறு உரிமைகள் பாதிக் கப்பட்டே வருகின்றன. ஏனைய சிறுவர்களோடு ஒப்பிடும்போது, இன்று பல்வேறு அபிவிருத்தி மாற்றங்கள் இடம்பெற்றாலு- ம்கூட, ஒட்டுமொத்தத்தில் ஒரு அரையடிமை நிலைமை யில்தான் மலையக சிறுவர்கள் வாழ்ந்துவருகின்றார்கள்.

சிறுவர்களை பாதுகாப்ப தற்கான நடவடிக்கைகளை மனித அபிவிருத்தி தாபனம் போன்ற சிவில் அமைப்புகளும் மற்றும் அரச நிறுவனங்களும் பாதுகாப்பு அமைப்புகளும் நடைமுறைப்படுத்துகின்றன. மலையகத்தை பொருத்த வரையில் இலங்கையி லேயே மிக அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப் படுகின்றனர் என்று ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இது அடிமைத்தனத்தின் ஒரு அங்கமாகவே காணலாம். மனித அபிவிருத்தி தாபனம் சிறுவர்;தொழிலாளர்முறையை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.

மலையக ஆண் மற்றும் பெண் சிறுவர்கள் நகர்ப்புற வீடுகள், கடைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இத்தகைய சிறுவர்கள்; துஷ்பிரயோ கம், சுரண்டல் மற்றும் சித்திரவதைக்கு ஆளாகி, அண்மைய ஆண்டுகளில் மர்மமான முறையில் இறப்பது இலங்கையின் சிறுவர் உரிமை களின் வரலாற்றை துரதிர்ஷ்டவச மாக விடயமாகும். இதனை மனித அபிவிருத்தி தாபனமா னது கடுமையாக எதிர்ப்பது மட் டுமன்றி சட்ட ஆலோசனை ம ற்றும் உதவிகளை வழங்கி வருகின்றது. கிராமப்புற மற்றும் தோட்டப்புற சிறுவர்களின்; கல்வி மற்றும் நலன் என்பது அரசின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும். அவர்களின் அடிப்படை உரிமைகளை சமர சம் செய்யவோ, பண்டமாற்று செய்யவோ முடியாது.

மலையக சமூகத்தில் சிறு வர்கள் பாலியல் வன்கொடுமை களுக்கு உள்ளாக்கப்படுவது பாரிய பிரச்சினையாகவே இன்றும் காணப்படுகின்றது. குறிப்பாக மலையக சமூகத்தின் பெண் பிள்ளைகள் வீட்டு வன் முறை, பாலியல் கொடுமைகள், பால்நிலை சமத்துவமின்மை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். ம லை யக பெருந்தோட்ட தொழிற்துறையில் ஈடுபடும் பெற்றோர்கள் வேலை செய்கின்ற நேரங்;களில் தங்களது பிள்ளைகளை வீடு களில் தனியாகவோ அல்லது அயலவர்களிடம் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில்;, பாடசாலை போன்ற இடங்;களில் விட்டுசெல்கின்றனர். அத்துடன் மிககுறைவான நேரங்களையே மலையக பெற்றோர்கள்; பிள்ளைகளுக்காக ஒதுக்குகின்ற மையால்; அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தெரிந்து கொள்வற்கும் சந்தர்ப்பம் மிக குறைவாகவே காணப்படுகின்றது.

மேற்படி பிரச்சினைகள் வறுமையின் காரண மாக மட்டும் ஏற்பட்டதேன்று குறிப்பிடமுடியாது. இதற்கு அரசியல், சமூக, பொருளாதார, பெருந்தோட்ட கட்டமைப்பு மற் றும் மதுபானம், மதுபோதை, புலம்பெயர் தொழில், நவீன தொலைதொடர்பு போன்ற பல்வேறு காரணங்கள் காணப் படுகின்றது. எவ்வாறேனினும் அரசியல் ரீதியாக நிதானமா கவும் நீண்ட காலத்தி ற்கு தேவையான உபாய மார்க்கங்கள் அடையாளம் காணப்படவேண்டியுள்ளன. இதற்கு கொள்கைத்திட் டம் உருவாக்கம் மற்றும் தீர்க்கதரிசன தலைமைத் துவம் தேவை என்பது வழியுறுத்தப்படுகின்றது. பாரதி குறிப்பிட்டதுபோல்,சிறுவர்களின் சமூக மாற்றத்திற்கு வல்லமை தேவையாக இருக்கின்றது. மாற்றம் தேவையாக இருக் கின்றது. சிறுவர்களுக்கான தன்னம்பிக்கையும், சுய மதிப் பீட்டையும் உறுதியையும் நாம் வழங்கவேண்டும் என குறிப்பிட்டார்.

மேற்படி சிறுவர்தின அமர் வில் தலவாக்கலை பிரதேச செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர், கெம்பிரிஜ்; கல்லூரி அதிபர், பொலிஸ் அதிகாரி, கல்வி அதி காரிகள், சுகாதார பணிமனை இயக்குனர் போன்றவர்களும் கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டனர். பிரதேசத்தில் உள்ளசிறுவர்கள்,பெற்றோர்கள், அரச உத்தியோகஸ்த்தர்கள், சிவில் சமூக அமைப்பினர், தொழிற்சங்கங்களை சார்ந்தவர்கள், ஆசிரியர்கள் போன்ற பல தரப்பினர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கது. நிகழ்ச்சிகளை மனித அபிவிருத்தி தாபன இணைப்பாளர் பி. ஸ்ரீகாந்த் மற்றும் ஆசிரியர் நடராஜா போன்றோர் வழிநடத்தினர்.

## கோட்டா அருகில் அமர்வதை தவிர்த்த சந்திரிகா சீன மக்கள் 74 ஆவது குடியரசு நிகழ்வில் சம்பவம்

சீன மக்கள் குடியரசின் 74ஆவது ஆண்டு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இலங்கையின் சீனத் தூதரகம் அழைப்பு விடுத்திருந்தது. இதில் சந்திரிகா பண்டாரநாயக்க ரணதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிகளில் இன்னும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படை யில் இவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவர்கள் நால்வருக்கும் ஒரே மேசையில் அமர்வதற்கான நான்கு நாட்காலிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தான் கோட்டாபய அருகில் அமர்வதை விரும்பாது அருகிலுள்ள மேசையை தனக்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டதாக ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு சென்ஹொங் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் மிக முக்கிய பிரமுர்கள் வரிசையில் இந்த நால்வரே பிரதானம ாக இடம்பிடித்திருந்தனர்.

சீனத் தூதுவர் இந்த நால்வரின் ஆசனங்கள் குறித்து அதி க சிரத்தை எடுத்ததாகத் தெரிகின்றது. எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அருகில் கோட்டாபயவின் ஆசனம் இருந்ததால் சந்திரிகா அவர் அருகில் அமர்வதை விரும்பியிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி காலத்தில் ரணில் மற்றும் மைத்திரியுடன் இணைந்து பயணித்த சந்திரிகா இடையில் மைத்ரி மஹிந்தவை திடீரென பிரதமராக்கி நாடாளுமன்றத்தை கலைத்தவுடன் அவரை கடுமையாக விமர்சித்திருந்தமை முக்கிய விடயம்.

எனினும், சுதந்திர கட்சியின் தலைவராக அந்நேரம் மைத்திரி இருந்த காரணத்தால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதேவேளை தான் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்த மஹிந்தவும் அதன் பிறகு சந்திரிகாவை ஓரங்கட்டிவிட்டு சுதந்திர கட்சியின் தலைமை பொறுப்பைக் கைப்பற்றினார்.

கோட்டாபய ஜனாதிபதியாவதை ஆரம்பத்திலிருந்து எதி ர்த்து வந்தவர் சந்திரிகா. அவர் இடையில் நாட்டை விட்டு வெளியேறியவுடன் ஜனாதிபதி பதவிக்கே இழுக்கு ஏற்படுத்தி யவர் என சந்திரிகா ஒரு சந்தர்ப்பத்தில் கோட்டாபயவை விமர்சித்திருந்தார்.

கூறப்போனால், முன்னாள் ஜனாதிபதிகளான ம ஹிந்த, மைத்ரி, கோட்டாபய ஆகிய மூவர் மீதும் சந்திரிகா வெறுப்புடனேயே இருக்கின்றார்.

எனவே, அன்றைய நிகழ்வில் இந்த மூன்று பேருடனும் அமர்வதற்கு அவர் விரும்பியிருக்கவில்லையென்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீன மக்கள் குடியரசு 1950ஆம் ஆண்டு உருவான போது அந்த நாட்டை தெற்காசியாவில் முதன் முதலாக ஏற்றுக்கொண்ட நாடு இலங்கையாகும். மேலும் சீன – இலங்கை உறவுகள் ஆயிரம் வருடங்களைக் கடந்ததாகும்.

கி.பி.410ஆம் ஆண்டு சீனாவின் புகழ்பெற்ற ஜின் வம்ச துறவியான பாக்சியன் இலங்கைக்கு வருகை தந்து தான் சீனாவிலிருந்து கொண்டு வந்த புத்த மத நூல்களை அடிப்படையாகக் கொண்டு புத்த இராச்சியத்தின் பதிவுகள் என்று நூலை எழுதியமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மாதோட்டம் என்று அழைக்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு பல நூறு வருடங்களுக்கு முன்பே சீன வணிகர்கள் வந்தமைக்கான சான்றாதாரங்களும் உள்ளன. சிறிமா அரசாங்கத்தின்போது சீனா அரசாங்கம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தை தனது நிதியில் அமைத்து கொடுத்தது.

பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தையே சீனாவுக்கு வழங்கிவிட்டார்.

மத்தள விமான நிலையமும் சீன நிதியுதவியுடன் நிறைவு செய்யப்பட்டது.

எல்லாவற்றையும் விட கொழும்பு நிதி நகரை சீனாவுக்கு மஹிந்த தாரை வார்த்துவிட்டமையை உலகமே அறியும்.

அந்த வகையில் இலங்கை ஜனாதிபதிகளை சீனா என்றுமே தனிப்பட்ட ரீதியில் கௌரவித்து கவனிக்கும் முகமாகவே அன்றைய தினம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

கோட்டாபய மீது மக்கள் எதிர்ப்பு இன்னும் இருப்பதாலும் அவரது காலத்தில் கொண்டுவரப்பட்ட சில கொள்கைகள் நாட்டுக்கு ஏற்புடையனவாக இல்லாததாலும் அதை பல தடவைகள் தான் விமர்சித்த காரணத்தால் அவருக்கு அருகில் அமர்வதை சங்கடமாக உணர்ந்துள்ளார் சந்திரிகா.

மேலும், அவருக்கு அருகில் அமர்ந்திருந்தால் நிச்சயம் அவர் தன்னுடன் நாகரிகம் கருதி கதைக்க முற்படுவார். இதை ஊடகங்கள் திரிபுபடுத்தி செய்தியாக போட்டுவிட் டால் தனது பெயரும் மக்கள் மத்தியில் விமர்சிக்கப்படும் என்ற காரணங்களால் அவர் அவருக்கு அருகில் அமர் வதை விரும்பியிருக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின் றன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச சமூகம் நேரடியாகத் தலையிடவேண்டும் கிளிநொச்சியில் போராட்டக்காரர்கள் வலியுறுத்து

ஐ.நாவுக்கும் மனு











இலங்கையின் நீதித்துறையினையும் இங்குவாழ்கின்றதமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர் கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம் நடத்தியவர்கள்.

இதுதொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மாண்புமிகு அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, கொழும்பில்வைத்து,இன்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனால்கையளிக்கப்படவுள்ள 'இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு'வில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கைத்தீவில் கடந்த எழுபது ஆண்டுகளுக்குமேலாகநீடித்துவருகின்றஇன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இனரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிர்வாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ்த் தேசிய இனம் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத் தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிர்வாகத் துறையின் கைப்பொம்மையாகச் செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது. நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம்அரசுவிரும்பியதீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிர்வாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசானது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப் புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

மதிப்பார்ந்த பொதுச்செயலாளர் அவர்களே!

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங் களை அழைத்து நிற்கிறோம் -என்றுள்ளது

முன்னதாக, நாட்டின் நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி வு.சரவணராஜாவுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்றுக் கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன் கிளிநொச்சி சட்டத்தரனிகளும் கட்டண ஆரப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (113)

# ஒக்ரோபர் மாத இறுதிக்குள் இலங்கையின் கடன் குறைப்பு குறித்து முக்கிய தீர்மானம்

ஜப்பான் செய்தித்தாள் தெரிவிப்பு

இலங்கையின் கடனை குறைப்பது தொடர்பில் இலங் கைக்கு கடனை வழங்கிய ஜப்பான் இந்தியா பிரான்ஸ் போன்ற நாடுகள்ஒக்ரோபர்மாதஇறுதிக்குள் பரந்துபட்ட உடன்பாட்டைஎட்டக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடனைத் திருப்பிச் செலுத்துவதை நீடிப்பது உட்பட முக்கிய தீர்மானங்களை இந்த நாடுகள் எடுக்கவுள்ளன.

இலங்கை, ஜப்பான், இந்தியா, சீனா உட்பட அதற்கு கடன்வழங்கியநாடுகளுடன் தனது வெளிநாட்டு கடன் தொடர்பில் பல சுற்றுப்பேச்சுகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் தனது கடன்களை மீள்ச்செலுத்துவதை ஒத்திவைத்த பின்னரே இலங்கை இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

மொராக்கோவில் சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலக வங்கியின் மாநாடுகள் ஒக்ரோபர் மாத இறுதியில் இடம்பெறவுள்ள நிலையில் அக்காலப்பகுதியில் இலங்கையுடன் உடன்படிக்கையொன்றை செய்துகொள்ள அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் விரும்புகின்றன.

சீனா இந்த குழுவில் சேர்வதற்கு மறுப்பு தெரிவித் துள்ளது. ஆனால் ஒரு பார்வையாளராக நீடிக்கின்றது.

சீனாவுடன்இணைந்தோ அல்லது சீனா இல்லாமலோ இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் மத்தியில்இணக்கப்பாடொன்றை எட்டுவதற்குமுயல்கின்றோம் என ஜப்பானின் நிதியமைச்சின் சிரேஸ்ட அதிகாரியொருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்களால் முடிந்ததை செய்வோம். ஆனால் இந்த மாதம் இது சாத்தியமாகுமா என்பதைத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள அந்த அதிகாரி சர்வதேச நாணயநிதியத்தின் மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் இதனைச் செய்யலாம் எனத்தனிப்பட்ட முறையில் கருதுகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# மட்டு. கொம்மாந்துறையில் பயங்கரம்: மூதாட்டியை தாக்கி தங்கநகை பறிப்பு

மட்டக்களப்பு, கொம்மாந்துறைப் பகுதியில் பெண் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டு அவரது 10 பவுன் பெறுமதியான தங்கச் சங்கிலி கொள்ளையடித்துச்சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினமான நேற்று தனிமையில் இருந்த குறித்த மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையன் அவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கசங்கிலியைக்கத்தியால்அறுத்துக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளான்.

இதில் படுகாயமடைந்த மூதாட்டி அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# சீரற்ற வானிலை காரணமாக வைரஸ் பரவல் அதிகரிக்கும்!

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வைரஸ் காய்ச்சல் கணிசமானளவு அதிகரிக்கலாம் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர்.

தற்போதுள்ள நிலைமைகளை அவதானிக்கும்போது, சிறுவர்களுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் போன்ற நிலைமைகள் அதிகளவில் ஏற்படக்கூடும் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக கடும் மழையுடன் கூடிய வானிலை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் குழந்தைகள் மற்றும் நலிவடைந்தோர் மத்தியில் விரைவில் பரவ கூடிய வைரஸ் காய்ச்சல் அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறெசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2023இல் வெளியிடப்பெற்றது.